# கிறிஸ்துவின் மானிடத் தன்மை

## 1. அறிமுகம்

கிறிஸ்து மனிதர்தான் என்று சொல்வதில் ஒரு தயக்கமும் இல்லை; இருக்கவும் கூடாது. ஏனென்றால் கிறிஸ்து மனிதனாக இருந்தால் மட்டுமே மனிதர்களாகிய நம்முடைய பாவங்களுக்காக (பதிலாளாக) சிலுவையில் மரிக்கமுடியும். அவர் மனிதன் இல்லையெனில் நம்முடைய பாவத்திற்காக மனித இரத்தம் சிந்தப்பட்டது என்பது பொருளற்றதாகிவிடும் எனவேதான், கிறிஸ்து மனிதனாகவும் இருப்பது தேவை.

எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே (1 தீமோ 2:6). அவர் உயிர்த்தெழுந்த பின்பு மனிதத்தன்மையை விட்டுவிட்டு பரலோகம் சென்றுவிட்டார் என்று சொல்லுவதும் தவறு. உயிர்த்தெழுந்தப்பிறகு அந்தத் மனிதத்தன்மையோடுதான் பரலோகம் சென்றிருக்கிறார். பிதாவின் வலதுபாரிசத்தில் இருக்கும்பொழுதும் மானிட தன்மையோடுதான் இருக்கிறார் ஆனால் நம்மைப்போல சரீரம் கிடையாது.

## 2. கிறிஸ்துவின் மானிடத் தன்மையின் அர்த்தம்

கிறிஸ்து இப்பூமியில் இருந்தபொழுது மனிதனின் எல்லாத் தன்மைகளையும் கொண்டிருந்தார். தெய்வத்துவத்திற்கான தேவபண்புகளை கொண்டிருந்ததுபோலவே அவர் மனிதத்துவத்தின் எல்லாப் பண்புகளையும் பெற்றிருந்தார். தெய்வீகம் மற்றும் மனுஷீகம் ஆகிய இரண்டு இயல்புகளையும் முழுமையாக பெற்றிருந்தார் இதனை இருமை இயல்பு என்று சொல்வார்கள். இயல்பாகவே அவர் தெய்வீகநபர்; கூடுதலாக அவர் மானிடத்தன்மையை எடுத்துக்கொண்டார். தெய்வத்தன்மையை விட்டுவிட்டு மனிதத்தன்மையை எடுத்துக்கொண்டார் என்கிற கூற்று தவறானது.

அந்த வார்த்தை மாம்சமாகி... (யோவான் 1:14). இதனுடைய அர்த்தம் வார்த்தை மாம்சமாகிவிட்டது என்றல்ல. உதாரணமாக... தண்ணீர் திராட்சரசமானது என்று பார்க்கும்பொழுது இப்பொழுது அங்கே தண்ணீர் இல்லை அது முற்றிலுமாக மாறிவிட்டது என்பது பொருள் ஆனால், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மானிடத் தன்மை என்பது கடவுள் தன்மையில் இருந்தவர் திடீரென்று மனிதனாக மாறிவிடவில்லை. கடவுள் தன்மையை பெற்றுக்கொண்டிருக்கிற அதேதருணத்தில் கூடுதலாக மனிதத்தன்மையையும் எடுத்துக்கொண்டார். அந்த மனிதத்தன்மை என்பது நம்மைப் போன்ற ஒரு நிலை என்று நினைத்துவிடகூடாது. நம்மைப்போன்ற எல்லா இயல்புகளும் அவரிடத்தில் இருந்திருந்தாலும்கூட பாவத்தில் அவர் நம்மை போன்றவர் இல்லை.

## 3. கிறிஸ்துவின் இருமை இயல்பு

**விளக்கம்**

'நிலையான அடிநிலை ஐக்கியம்' அல்லது 'தெய்வ மனித தன்மையின் மாறா ஒருமை நிலை' என்றும் சொல்லலாம். அதாவது ஒரே ஆள்த்தன்மையில் இரு இயல்புகள் என்பதாகும்.

**இருமை இயல்பின் பயன்**

தேவன் என்கிற வகையில் அவருடைய மரணம் அதாவது இயேசு கிறிஸ்துவின் மரணம் ஒட்டுமொத்த மனித குலத்தின் மீட்புக்கும் (எல்லா காலத்திலும் வாழும் மனிதர்களுக்கும்

பொருந்தும்) போதுமானதாக இருப்பதுடன் மனிதன் என்கிற வகையில் அவர் மனிதனுடைய பிரதிநிதியாக (பதிலாளாக) தகுதியானவராகவும் இருக்கிறார். ஆக, இப்படிப்பட்ட இருமை இயல்பு கொண்ட ஒருத்தரால் மட்டும்தான் மனிதர்களை இரட்சிக்கமுடியும்; அப்படிப்பட்ட ஒரே ஒருவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மட்டும்தான். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை (அப் 4:12).

கர்த்தராகிய இயேசுவினுடைய தெய்வீகத்தன்மையும் மனிதத்தன்மையும் ஒப்பற்றதாகவும் மறைபொருளாகவும் விவரிப்பதற்கு அரிதாகும் உள்ளன. ஒரே ஆள் தன்மையில் இரு தன்மைகளும் ஒருங்கிணைந்து காணப்பட்டன. அவை என்றென்றும் பிரிக்க முடியாதபடி ஒன்றாக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் இவ்விரு தன்மைகளும் தனித்தனியே வெளிப்படகூடியவையாகவே இருந்தன. இவ்விரு தன்மைகளும் அவரில் மாற்றமடையாமல் முழுமையாக தனித்தே செயல்பட்டன. அவருடைய இரு தன்மைகளும் இணைந்து மூன்றாவது ஒரு ஆள்த்தன்மையாக உருவாகிவிடவில்லை அல்லது ஒரு தன்மை மற்றதாக மாறிவிடவில்லை அல்லது ஒரு தன்மை மற்ற தன்மையை காட்டிலும் மேலோங்கி அதை தடுத்து கிழ்ப்டுத்திவிடவில்லை. இரண்டுமே சேர்ந்ததான் இருக்குது என்பதற்கு சில காரியங்களை காணலாம்.

அவர் மனிதனாக இல்லாத நிலையில் தேவனாகி கிரியை நடப்பித்தார் அல்லது தேவனாக இல்லாத நிலையில் மனிதனாக கிரியை நடப்பித்தார் என்று சொல்லமுடியாது. நான் தாகமாயிருக்கிறேன் என்று சொல்லும்போது அவருடைய மனிதத்தன்மையோ அல்லது நான் பாவங்களை மன்னிக்கிறேன் என்று அவர் சொல்லும்போது அவருடைய தெய்வீகத்தன்மையோ வெளிப்படவில்லை இரு தன்மைகளும் சேர்ந்தே அவரிடம் காணப்பட்டது.

- அவர் தலையணை வைத்து நித்திரை செய்தவராக இருந்தபோதிலும் பெருமுயற்சி எதுவுமின்றி காற்றையும் கடலையும் அதட்டி கொந்தளிப்பை அமைதிப்படுத்தினார் (மாற்கு 4:38,39).
- தன் பிரயாணத்தில் களைப்பாயிருந்தபோதிலும் சமாரிய ஸ்திரியின் முந்திய வாழ்க்கை விபரங்களை எடுத்துரைத்தார் (யோவான் 4:3–29)
- லாசருவின் கல்லறையினிடத்தில் கண்ணீர் வடித்தார்; ஆயினும் லாசருவை பேர் சொல்லி அழைத்து உயிரோடு எழுப்பினார் (யோவான் 11)
- கெத்சமனே தோட்டத்தில் அழ்ந்த துக்கத்தில் இருந்தார் ஆயினும் தம்மை எதிர் கொண்டு வந்தவர்களிடம் முன்னோக்கிச் சென்று நான்தான் எனக்கூறி தம்மையே ஒப்புக்கொடுத்தார்
- இதைத்தான் கலாத்தியரில் பார்க்கிறோம் பெண்ணிடம் பிறந்த போதிலும் அவர் தேவகுமாரன். இப்படிப்பட்ட ஒருவரை நாம் வாழ்த்துவோம் வணங்குவோம்

### 4. மனிதத்தன்மை (நபர்) என்றால் என்ன?

ஒரு நபருக்கு அறிவு, உணர்வு மற்றும் சித்தம் ஆகிய மூன்றும் காணப்படும். சரீரம் இருக்கவேண்டும் என்று அவசியமில்லை.

**கிறிஸ்துவின் மானிட தன்மைக்கான ஆதாரங்கள்**

இயேசுகிறிஸ்து மனித வம்சாவழியில் தோன்றியவர் – மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார் (ரோமர் 1:5). மாம்சத்தின்படி அவர் தாவீதின் சந்ததியில் பிறந்தவர் ஆகவே, அவர் மனிதன்.

ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசுகிறிஸ்துவினுடைய வம்சவரலாறு (மத் 1:1) என்று பார்க்கிறோம்.

காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார் (கலாத்தியர் 4:5)

கிறிஸ்துவின் மனித வம்சாவழி இதைப்பற்றி நாம் படிக்கும்போது 2 சாமுவேல் 7:12–17 வரை உள்ள வசனங்களில் அடிப்படையில் ஆண்டவர் தாவீதுக்கு ஒரு வாக்குறுதி கொடுக்கிறார் அவனுடைய சந்ததியிலிருந்து ஒருவர் வருவார்; அவருடைய இராஜ்யம் நித்தியமான இராஜ்யமாக இருக்கும் என்பதாக பார்க்கிறோம். இந்த நித்தியமான இராஜ்ஜியத்தை ஆண்டவர் தாவீதுக்கு வாக்களித்திருக்கிறார். இந்த ராஜ்யமானது ஆயிரமாண்டு அரசாட்சியோடு தொடர்புபடுத்தப்படுகிறது. வரப்போகிற ஆயிரமாண்டு அரசாட்சியில் கிறிஸ்து ஆள வேண்டுமானால் அவர் தாவீதின் குமாரனாக இருக்கவேண்டும். ஏனெனில் தாவீதுக்குத்தான் அந்த வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல நித்தியமான ஒருத்தர் மூலமாகதான் இந்த இராஜ்ஜியத்தை நிறுவமுடியும். கிறிஸ்து ஒருவரே நித்தியமானவர்; நாம் அநித்தியமானவர்கள்; தாவீதும் அநித்தியமானவன். ஆக கிறிஸ்து நித்தியமானவரும் தாவீதின் வம்சத்தில் வந்தவருமாக இருக்கிறார்.

உன் வீடும், உன் ராஜ்யமும், என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்; உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும் என்கிறார் என்று சொல்லச்சொன்னார் (2 சாமு 7:16). உன் சந்ததியை எழும்பப்பண்ணி, அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன் (2 சாமு 7:12). இது நேரடியாக சாலமோனுக்கு சொல்லப்பட்ட வாக்குறுதியாக இருந்தாலும் தாவீதின் ஆட்சியின் தொடர்ச்சியை பற்றிய வாக்குறுதியாக இருக்கிறது. எனவே இந்த வசனங்கள் ஆண்டவருடைய மானிடத்துவத்தின் ஆதாரங்களில் அவர் தாவீதின் வம்சத்தில் பிறந்த ஒரு மனிதர் என்பதற்கான ஆதாரமாக இருக்கிறது.

## 5. மானிடப் (அல்லது) கன்னிப் பிறப்பு

கன்னிப் பிறப்பு என்பது கிறிஸ்தவத்தின் அடிப்படைத் தத்துவங்களில் இதுவும் ஒன்று. ஏனெனில் இந்த மாதிரி ஒரு பிறப்பு வேறு எவருக்கும் இல்லை. 'பெத்தலகேம் குறவஞ்சி' என்கிற செய்யுளில் தஞ்சை வேதநாயக சாஸ்திரியார் இப்படி எழுதுகிறார்: தந்தை இல்லா திருமகனை தாதையருக்கொருமகனை சந்தமரி தலைமகனை வாழ்த்துகிறேன். இதன் விளக்கம்: அவர் உலகப்பிரகாரமான தந்தை இல்லாத திருமகன். பரலோகத் தந்தையானவருக்கு ஒரே மகன். சந்தமரி என்கிற அந்த சொல்லானது அதன் பிறகு அவள் பல பிள்ளைகளைப் பெற்றாள் என்பதற்கான ஒரு சொல்லாடல். அதில் தலைமகனாகப் பிறந்தவர் ஆண்டவர் இயேசு கிறிஸ்து.

ஆதியாகமத்திலேயே ஸ்திரியின் வித்தாக ஒருவர் தோன்றுவார் என்ற செய்தி நமக்கு கிடைத்து விட்டது. ஆனால் அந்த ஸ்திரீ ஒரு கன்னி என்பது ஏசாயாவுக்கு வரும்போதுதான் வெளிப்படுத்துகிறார் (ஏசாயா 7:14). கன்னிகை கர்ப்பவதியாவது ஒரு அடையாளமாக இருந்தது. கன்னிகை என்பதற்கான எபிரெய சொல் 'அல்மா' (Alma) என்று ஒரு எபிரெய எழுத்தாளர் சொல்லுகிறார். இதை 'புதிதாக கல்யாணமான பெண்' என்றும் பொருள்கொள்ளலாம் என்கிறார். ஆகவே அவளுக்கு திருமணமாகி இருக்கலாம் என்பது அவர்களின் கூற்று! எப்படியோ அவள் புருஷனை அறியாத கன்னிப்பெண் என்பதில் சந்தேகமில்லை (மத் 1:25). அவர் ஸ்திரியின் வித்து; ஆணின் வித்து அல்ல (ஆதி 3:15). ஏற்கனவே இருந்த வார்த்தை மாம்சமாகி வருவதற்கு ஸ்திரியின் வித்தாக தோன்றுகிறார்.

காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார் (கலா 4:5) தம்முடைய குமாரன் என்று பிதா உரிமை கொண்டாடுகிறார் ஆனால், ஸ்திரீயினிடத்திற் பிறந்தவர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த வார்த்தை ஆங்கிலத்திலே 'Made of a woman' என்று இருக்கிறது; இங்கே பிறப்பு பற்றி சொல்லப்படவில்லை. அதே அதிகாரம் 28, 29 வசனங்களில் பிறப்பு என்றுதான் இருக்கிறது ஆனால் இங்கே ஆங்கிலத்திலே 'born after flesh' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு இடங்களிலும் வித்தியாசமான வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறதினாலே கிறிஸ்துவினுடைய அந்த கன்னிப்பிறப்பு இங்கே பதிவு செய்யப்படுகிறது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார் (1 தீமோ 3:16)

மற்ற புராணங்களில் சொல்லப்படுகிற பிறவி என்கின்ற அடிப்படையில் இல்லாமல் எல்லா மனிதர்களையும் போல மரியாளின் கருவில் குழந்தையாக பிறந்து வளர்ந்தவர். இந்த கருத்தரிப்பு இயற்கைக்கு அப்பாற்பட்டது ஆனால் இவரின் பிறப்பு இயற்கையானது. அவருக்கு சரீரப் பிரகாரமான தகப்பன் இல்லை என்பதால் அவருக்கு மனிதனுடைய பாவம் மரியாளின் மூலமாக வரவில்லை. இயேசுகிறிஸ்துவினுடைய மனிதம் தேவனால் உருவாக்கப்பட்டு மரியாளின் கருவில் செலுத்தப்பட்டது. மனித உயிரணு அங்கு இல்லை; இதற்கான ஆதாரம்: ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர் (எபி 10:5) எனவே இயேசு கிறிஸ்து என்கிற மனிதரின் சரீரம் தேவனால் ஆயத்தப்படுத்தப்பட்டது.

## 6. மனித வளர்ச்சி

அவருடைய சரீர வளர்ச்சி மற்ற மனிதர்களைப் போலவே சாதாரணமானது. ஆதாம் ஒரு மனைவியோடு வாழ கூடிய அளவிற்கு ஒரு முழு மனிதனாக (சுமார் 25 அல்லது 30 வயசு ஆண்மகனாக) படைக்கப்பட்டான்; ஒரு குழந்தையாக இல்லை. ஆனால் பிந்தின ஆதாமாகிய இயேசுகிறிஸ்து திடீரென்று தோன்றிவிடவில்லை; சாதாரண மனிதபிறப்பு மற்றும் மனித வளர்ச்சிதான் அவருக்கு இருந்தது. மனித வளர்ச்சிக்கு சில விஷயங்கள் இருக்கின்றன. இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார் (லூக்கா 2:52). இங்கு சொல்லப்பட்டுள்ள நான்கு விஷயமும் ஒரு சாதாரண மனிதனுக்கு உரியது.

i. **ஞானம் (Intellectual development):** கிறிஸ்துவின் 12 முதல் 30 வயது வரையிலான காலம் பற்றிய விவரம் நமக்கு இல்லை. அவருக்குப் பன்னிரண்டு வயதானபோது...,அவர் தேவாலயத்தில் போதகர் நடுவில் உட்கார்ந்திருக்கவும், அவர்கள் பேசுகிறதைக் கேட்கவும், அவர்களை வினாவவும் கண்டார்கள். அவர் பேசக்கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும் அவர் சொன்ன மாறுத்தரங்களையுங்குறித்துப் பிரமித்தார்கள் (லூக்கா 2:42,46,47). மலைப்பிரசங்கத்தின் இறுதியில் இப்படியாக வாசிக்கிறோம்: இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது, அவர் வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியால், ஜனங்கள் அவருடைய போதகத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள் (மத் 7:28,29). இவ்வசனங்களில் அவருடைய அந்த அறிவைப் பற்றி மற்றவர்கள் சாட்சி கொடுத்தார்கள்.

ii. **வளர்த்தி (Physical development):** சரீர வளர்ச்சி பற்றி பார்க்கும்பொழுது அவர் மனிதனாக இருந்தார் ஆனால், பாவமற்ற மனிதத்தன்மை அவரிடத்தில் இருந்தது. சமாரியா ஸ்திரீ உம்மைச் சுற்றி ஒரு ஒளிவட்டம் இருக்கிறதே! நீர் வித்தியாசமாய் இருக்கிறீரே என்று கேட்கவில்லை. அவள் அவரை ஒரு சாதாரண யூதராகதான் பார்த்தாள் (யோவான் 4:9).

iii. **தேவகிருபை (Spiritual development):** 12 வயதிலேயே அவருடைய போதகத்தை கண்டு பரிசேயர் வியந்தார்கள். இவன் தச்சனுடைய குமாரன் அல்லவா? இவன் தாய் மரியாள் என்பவள் அல்லவா? யாக்கோபு யோசே சீமோன் யூதா என்பவர்கள் இவனுக்குச் சகோதரர் அல்லவா? இவன் சகோதரிகள் எல்லாரும் நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? இப்படியிருக்க, இதெல்லாம் இவனுக்கு எப்படி வந்தது? என்று சொல்லி, அவரைக் குறித்து இடறலடைந்தார்கள் (மத் 13:55–57). அதற்கு காரணம்... அவர் மனிதனாக இருந்தபொழுது ஜெப வாழ்க்கையில் மிகவும் அதிகமாக ஈடுபட்டிருந்தார். ஜெப வாழ்க்கை இல்லாமல் நம்மால் வெற்றி பெறமுடியாது. அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம்பண்ணினார் (மாற்கு 1:35).

iv. **மனுஷர் தயவு (Social development):** கடைசியாக சமூக வாழ்க்கை. இந்த உலகத்தில் பாவமற்ற ஒரே ஒருவர் இயேசு கிறிஸ்துதான் ஆயினும் அவர் பாவிகளின் நேசர் என்று அழைக்கப்பட்டார். பாவத்திற்கு விலகியும் பாவிகளுக்கு நெருங்கியும் வாழ்ந்தார். மற்றும் உலகப் பிரகாரமாக இருக்கக்கூடிய பெற்றோருக்குக் கீழ்ப்படிந்தும் இருந்தார் என்று வாசிக்கிறோம் (லூக்கா 2:51).

கல்யாணத்திற்கு சென்றார்; சாவு வீட்டிற்கும் சென்றார்; அழைக்கப்பட்ட விருந்துக்கு சென்றார்; பண்டிகைக்கு சென்றார்; அழுகிறவர்களோடு அழுதார். இப்படி பல நிலைகளில் மனிதர்களோடு எப்போதும் சஞ்சரித்துக்கொண்டிருந்தார். ஆக, அவருடைய மனித வளர்ச்சி நம் எல்லாரையும் போல ஒரு சாதாரணமான வளர்ச்சியாகத்தான் இருந்தது. அவர் பாவம் தவிர எல்லாவற்றிலும் மற்ற மனிதர்களைப் போன்ற மனித உடலையும் உள்ளத்தையும் உதிரத்தையும் கொண்டிருந்தார். பாவம் இல்லாததினால் அதினால் வரக்கூடிய நோய்கள் இல்லை.

- நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டுப்பார்த்ததுமாயிருக்கிற ஜீவவார்த்தை... (1 யோவான் 1:1). ஆக, அவர் சரீரத்தில் இருந்தார்.

- இவள் இந்தத் தைலத்தை என் சரீரத்தின் மேல் ஊற்றினது என்னை அடக்கம்பண்ணுவதற்கு எத்தனமான செய்கையாயிருக்கிறது (மத் 26:12).
- பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார் (எபி 2:14).
- ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர் (எபி 10:5).
- அந்த வார்த்தை மாம்சமாகி... (யோவான் 1:14)
- இதோ இந்த மனுஷன் என்று பிலாத்து சொன்னான் (யோவான் 19:5)
- மனுஷனாகிய கிறிஸ்து என்று பவுல் சொன்னான் (1 தீமோ 2:6)
- இயேசு கிறிஸ்துவே தன்னை மனுஷகுமாரன் என்று அறிவித்துக்கொண்டார் (மத் 20:18).

உயிர்த்தெழுதலுக்கு பிறகும்கூட அவர் சரீரத்தில் வந்தார் ஆனால் அது மகிமையின் சரீரமாக இருந்தது.

## 7. அவர் மனித ஆத்மா மற்றும் ஆவியை உடையவராக இருந்தார்

பொதுவாக 'ஆவி' என்று சொன்னவுடன் நாம் பரிசுத்த ஆவி என்று புரிந்துகொள்ளுகிறோம். இயேசு கிறிஸ்து மற்ற மனிதர்களைப் போன்றே ஆவி, ஆத்மா, சரீரம் ஆகியவற்றை உடையவராக இருந்தார்.

- என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது (மத்தேயு 26:38)
- பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் (லூக்கா 23:46)

எல்லா பலவீனங்களையும் கொண்ட பாவமற்ற மானுட இயல்பை அவர் உடையவராக இருந்தார். பாவத்தின் நிமித்தமாக வரக்கூடிய வியாதி அவருக்கு இல்லாமல் இருந்தது ஆனால் மனுஷ சரீரத்தில் காணப்படுகிற சாதாரண இயல்புகள் அவரிடத்தில் காணப்பட்டது.

- அவருக்குப் பசியுண்டாயிற்று (மத் 4:2)
- இயேசு பிரயாணத்தினால் இளைப்படைந்தவராய் அந்தக் கிணற்றினருகே உட்கார்ந்தார் (யோவான் 4:6).
- தாகமாயிருக்கிறேன் என்றார் (யோவான் 19:28).
- அவரோ நித்திரையாயிருந்தார் (மத் 8:24)
- இயேசு கண்ணீர் விட்டார் (யோவான் 11:35; லூக்கா 19:41)
- என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது (மத் 26:38)
- நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார் (யோவான் 10:17,18) – அவருடைய மரணத்தை அவரே ஏற்றுக்கொண்டார் ஆனாலும், அவருடைய சரீரம் அழகிப்போகதில்லை; அவர் உயிரோடெழுந்து தன்னுடைய தேவத்துவத்தை நிரூபித்தார்.
- வரி செலுத்தினார்; விசாரிக்கப்பட்டார்; நாசரேத்தூரான் என்று அழைக்கப்பட்டார். எனவே, இயேசு ஒரு பூரணமான மனிதன் என்று அறியலாம்.